# 1. நதி எங்கே போகிறது?

**அலகு அறிமுகம்**

மனிதனுக்கு இறைவன் அளித்த கொடை **இயற்கை**. ஒரு நாடு இயற்கை வளங்களுடன் திகழுமானால் அந்நாட்டைக் கடவுளின் சொந்த நாடு என அழைப்பர். கேரள மாநிலத்தை நாம் அவ்வாறுதான் போற்றிப் புகழ்கிறோம். இயற்கையை இரசிக்க வேண்டும்; அதன் பயன்களை ருசிக்க வேண்டும்; அதை நாட்டின் பொதுச் சொத்தாக மதிக்க வேண்டும். மேலும் இயற்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். எண்ணங்கள் நம் ஒவ்வொருவர் மனதிலும் தோன்ற வேண்டும். நதி இயற்கை அன்னையின் செல்லப்பிள்ளை. அதன் அழகையும், வனப்பையும் கண்டுகளிக்க வேண்டும். அதுபோன்றே நதிகள் வற்றிவரண்டு தேய்ந்து போகும் அவலத்தைப் போக்க வேண்டும். நதிகளின் ஓட்டம் தான் சமூகத்தின் உயிரோட்டம் என்ற கருத்தைக் குழந்தைகள் மனமகிழ்ந்து ஏற்க வேண்டும். இக் குறிக்கோளின் அடிப்படையில்தான் இவ்வலகு புனையப்பட்டுள்ளது.

**இவ்வலகில் மூன்று துணைஅலகுகள் உள்ளன.**

- ஒரு நதியின் பயணம் (**கவிதை**)
- புல்லின் புலம்பல் (**சிறுகதை**)
- நம் ஊரைப் போல வருமா? (**சிறுகதை**)

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- கவிதைகளில் ஒரே ஓசையுடைய தொடர்கள் உண்டு என அறிகிறார்கள்.
- படங்கள், காட்சிகள் போன்றன பார்த்து வருணனைத் தொடர்கள் எழுதுகிறார்கள்.
- அறிவிப்புப் பலகையின் தேவையறிந்து தயாரிக்கிறார்கள்.
- கதைகள் மூலம் பல்வேறு கருத்துகளை அறிந்து கொள்ளுகிறார்கள்.
- ஒருமை பன்மை வேறுபாடு அறிகிறார்கள்.

## அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • கவிதைகள், பாடல்கள் ஆகியன வாசித்து நதிகளின் அழகையும் அவற்றின் சிறப்புகளையும் புரிந்து கொள்ளுதல்.<br>• படங்கள், காட்சிகள் போன்ற வற்றைப் பார்த்துப் பொருத்தமான வர்ணனைத் தொடர்களைக் கூறுதல்.<br>• நதிகளைப் பாதுகாக்க வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் அறிவிப்புப் பலகைகள் உருவாக்குதல்.<br>• கவிதைகள், நிகழ்வுகள் போன்ற வற்றை வாசித்து நதிகள் மாசுபடு வதால் சமூகத்தில் ஏற்படும் பின் விளைவுகளைப் புரிதல்.<br>• மொழிக் கூறுகளைப் புரிந்து கொள்ளுதல். | • பாடல்கள் பாடுதல்.<br>• வர்ணனைத் தொடர்கள் கூறுதல்.<br>• படம் பார்த்துக் கருத்து கூறுதல்.<br>• அறிவிப்பு பலகை தயாரித்தல்.<br>• படம் பார்த்துக் காட்சிகள் எழுதுதல்.<br>• வாக்கியங்கள் எழுதுதல்<br>• மொழிச் செயல்பாட்டில் ஈடுபடுதல். | • கவிதைகள், பாடல்களில் ஒத்த ஓசையுடைய தொடர்கள் உள்ளன என அறிந்து கொள்ளுகிறார்கள்.<br>• படங்கள், காட்சிகளில் பல்வேறு பொருளை உணர்த்தும் வர்ணனைத் தொடர்கள், குறிப்புகள் உள்ளன என அறிகிறார்கள்.<br>• அறிவிப்புப் பலகையின் தேவையறிந்து பொருத்தமான தொடர்களைப் பயன்படுத்தி எழுதி வெளியிடுகிறார்கள்.<br>• இயற்றைக்கு எதிரான சீர்கேடுகளைச் சுட்டும் பல்வேறு கருத்துகளைக் கதைகள், நிகழ்வுகள் மூலம் வெளியிடலாம் என அறிந்து கொள்ளுகிறார்கள்.<br>• ஒருமை, பன்மைத் தொடர்களை உருவாக்குகிறார்கள். |



இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் முற்றுப்பெற சுமார் 18 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

**கற்றல் துணைக்கருவிகள்**

- **சொற்கள், தொடர்கள், வர்ணனைத் தொடர்கள் எழுதிய படத்தாள்கள்**
- **இயற்கைக் காட்சிப் படங்கள்**
- **அறிவிப்பு அட்டைகள்**

## ஒரு நதியின் பயணம்

**வகுப்பறையில்...**

- பாடப்பகுதிக்குள் நுழையுமுன் கவிஞர் **கே.ஜீவபாரதி** எழுதிய **நதிமூலம்** பாடலை இராகத்துடன் பாடுங்கள்.

### நதிமூலம்

மலையிலிருந்து வருகிறேன்
மணலைச் சேர்த்துத் தொடர்கிறேன்
பல மொழிகள் பேசுவோரைப்
பார்த்து நானும் வருகிறேன்.

காடு மேடு தாவுகிறேன்
கல்லும் முள்ளும் பாய்கிறேன்
பாடுபடும் உழவர்களின்
பரவசத்தைக் காண்கிறேன்.

வயல் செழிக்க வருகிறேன்
வளரும் பயிரில் சிரிக்கிறேன்
வளைந்து நெளிந்து செல்வதாலே
வாட்டமின்றித் தொடர்கிறேன்.

ஓடையாகப் பிரிகிறேன்
ஊருக்கெல்லாம் செல்கிறேன்
ஆடுமாடு குருவி காகம்
அனைவருக்கும் உதவுகிறேன்.

## வகுப்பறைச் செயல்பாட்டுப் படிகள்

**பாடுதல்**

- பாடலுக்குச் சிறந்த மெட்டமைத்தல்.
- வகுப்பறையில் ஓரிரு முறை குழந்தைகள் பாடட்டும்.
- குழந்தைகளைக் குழுத் தந்திரங்களின் அடிப்படையில் குழுவாக்குதல்.
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்து மேம்படுத்திப் பாடுதல்.
- பின்னர் தனி நபர்களாகப் பாட வாய்ப்பளித்தல்.
- குழுவில் மேம்படுத்துதல்.
- சிறப்பாகப் பாடிய குழுவையும் தனி நபரையும் பாராட்டுதல்.
- பாடலைத் தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

**இரசனைக்குறிப்பு**

- கவிதை வரிகளை மீண்டும் மீண்டும் வாசித்தல்.
- நயமான சொற்களின் தன்மை அறிதல்.
- பாடல் வரிகளின் ஒற்றுமை அறிதல்.
- விருப்பமான வரிகளைக் கண்டறிதல் / காரணம் கூறுதல்.
- இரசனைக் குறிப்புகள் எழுதுதல்.
- குழுவில் வெளியிடுதல்.
- பின்தங்கியோருக்கு வாய்ப்பளித்தல்.
- மாதிரியைப் பார்த்து மேம்படுத்துதல்.
- மதிப்பீடு செய்தல்.

**கவிதை எழுதுதல்**

- தனித்தனியாகக் கவிதையை முழுமைப்படுத்துதல்.
- குழுவில் வெளியிடுதல்.
- மாதிரிக் கவிதையைப் பார்த்து மேம்படுத்துதல்.
- குழந்தைகள் தங்கள் கவிதைத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளுதல்.






## பாடுங்கள்

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பற்றிய குறிப்புகளைக் கூறி **நதி எங்கே போகிறது?** பாடலைப் பாடச் சொல்லுங்கள். பாடலுக்குப் பல்வேறு மெட்டுகள் அமைத்துக் குழந்தைகளைக் குழுவாகப் பாடச் சொல்லுங்கள். தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு செய்யுங்கள்.

### தொடர் மதிப்பீடு

- இராகம் தாளம் பாவனையுடன் பாடுதல்.
- கருத்துத் தெளிவுடன் பாடுதல்.
- ஏற்ற இறக்கத்துடன் பாடுதல்.
- பல்வேறு மெட்டுகள் அமைத்துப் பாடுதல்.

## வாசித்து மகிழ...

### ஆறு

வண்டல் மணல் சூழவே
வளமாய் ஆறு ஓடுது.
பசுமை வளம் கொஞ்சவே
பாங்காய் ஆறு ஓடுது.
அமைதியாக நதியுமே
அழகு பட ஓடுது.
குடிக்க நீர் தருகுது
குளிக்க நன்கு உதவுது.
பயிர் வளர ஓடுது
பார் செழிக்க ஓடுது.
மின்சாரமும் தருகுது
மேன்மை பல உள்ளது.
கடலில் போய்ச் சேருது
கரை புரண்டு ஓடுது.
தாகம் தணிக்கும் நீரிது
தரிசுப் பயிரும் செழிக்குது.

- என் கவிதைப் புத்தகத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

பாடலை வாசித்துக் குழந்தைகள் நதியின் செயல்களைக் குறிக்கும் சொற்களை எடுத்து எழுதட்டும்.

- குதித்து வந்தேன்
- கடந்து வந்தேன்
- தவழ்ந்து வந்தேன்
- ஏறி வந்தேன்
- நிரம்பி வந்தேன்
- ஓடி வந்தேன்
- நடந்து வந்தேன்
- பார்த்து வந்தேன்
- நெடுக வந்தேன்
- அலைந்து வந்தேன்



நதி எங்கெல்லாம் சென்று வருவதாகப் புலவர் கூறுகிறார்? பாடலிலிருந்து வாக்கியங்களை எடுத்து எழுதச் செய்தல்.

- மலைமேல் ஏறி வந்தேன்
- காட்டில் ......................
- சமவெளியில் ......................
- மேடுகள் மேல் ......................
- புன்செய்காட்டில் ......................
- ஏரி குளங்களில் ......................
- ஓடைகளில் ......................
- ஆழியில் ......................



குழந்தைகளிடம் நதி தொடர்பான சொற்களைச் சொற்சூரியனில் எழுதி முழுமைப் படுத்தச் சொல்லுங்கள்.

| | |
|---|---|
| • மீன்கள் | • நீரோட்டம் |
| • படகுகள் | • ஆழம் |
| • அலைகள் | • ஆற்றுமணல் |
| • நீர்ப்பெருக்கு | • ஆற்றங்கரை |



## சொல்லுங்கள்

- குழுச் செயல்பாடாக வர்ணனைத் தொடர்கள் உருவாக்கச் செய்யுங்கள். நான்கு அல்லது ஐந்து குழுவாக அமைத்துப் பாடப் பகுதியிலுள்ள படங்களுடன் இயற்கை தொடர்பான பிற வண்ணப் படங்களையும் ஒவ்வொரு குழுவுக்கும் இரண்டு வீதம் கொடுத்துச் செயல்பாட்டை முழுமைப்படுத்தலாம்.

| | |
|---|---|
| • வண்ணமலர்கள் | • நிழல் மரங்கள் |
| • காட்டாற்று வெள்ளம் | • பூங்கொத்துகள் |
| • சோலை வனம் | • வெண்மேகக் கூட்டம் |
| • சிகப்பு ரோஜாக்கள் | • தெளிந்த தண்ணீர் |
| • அடர்ந்த காடு | • பச்சை மரங்கள் |
| • நீல வானம் | • வெள்ளை அருவி |
| • பசும் சோலை | • வெள்ளப்பெருக்கு |

**வர்ணனைச் சொற்கள் :**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் வர்ணனைப் படங்கள் / படக் காட்சிகள் அளித்தல்.
- படங்களை உற்று நோக்கிக் கலந்துரையாடுதல்.
- வர்ணனைத் தொடர்கள் எழுதிக் குழுவில் வெளியிடுதல்.
- பிறகுழுவினர் மதிப்பீடு செய்தல்.
- சார்ட்டில் எழுதிய வர்ணனைத் தொடர்களை வகுப்பில் காட்சிப்படுத்துதல்.
- குழந்தைகள் மேம்படுத்துதல்.
- பின்தங்கிய குழைந்தைகளுக்கு வாய்ப்புக் கொடுத்தல்.
- தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

| தொடர் மதிப்பீடு |
|---|
| • பொருத்தமான சொல்லாட்சி<br>• கற்பனை நயம்<br>• சிறந்த தொடர் அமைப்பு |



## ஒன்றும் பலவும்

- ஒருமை பன்மையைப் புரிந்து கொள்வதற்காக இரண்டு செயல்பாடுகள் பாடப்பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளன. எழுத்துகள் மாறாது இயல்பாக **கள்** சேர்ந்து வரும் பன்மைத் தொடர்கள் உருவாகுமாறும், எழுத்துகள் மாறி **ம்** என்று முடியும் பெயர்ச் சொற்கள் திரிந்து பன்மைத் தொடர்கள் உருவாகுமாறும் செயல்பாடுகள் அமையப் பெற்றுள்ளன. தேவைக்கேற்ப உங்களிடமுள்ள சொற்களையும் சேர்த்துப் பன்மைத் தொடர்கள் உருவாக்கலாம்.

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்துங்கள்**

| | | |
|---|---|---|
| • புத்தகம் | • கரம் | • வனம் |
| • படம் | • நிறம் | • பழம் |
| • கட்டடம் | • வண்ணம் | • மடம் |
| • காகிதம் | • நகம் | • இடம் |
| • மரம் | • காகம் | • பாலம் |

- குழந்தைகளின் படைப்புகளைப் படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**படச்சிறப்பு**

படம் ஒன்று பத்து ஆயிரம் சொற்களுக்குச் சமம் என்றொரு பழமொழி உண்டு. எவ்வளவு தான் சொற்களால் விளக்கம் சொன்னாலும் ஒரு படத்தைப் பார்த்துக் குழந்தை புரிந்து கொள்வதைப் போலப் புரிய வைக்க முடியாது. நம் பாடப் புத்தகத்திலுள்ள அலகுகளோடு தொடர்புடைய படங்களைத் திரட்டி ஒரு படத்தொகுப்பு உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

**ஒரு படத்தை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?**

- படத்தலைப்பு எழுதலாம்.
- கதாபாத்திரங்களுக்கேற்ப உரையாடல் எழுதலாம்.
- படத்திலுள்ள காட்சிக்கு முன்னும் பின்னும் என்ன நடந்திருக்கும் என ஊகிக்கலாம்.
- இரு வேறு படங்களைத் தொடர்புபடுத்தி நிகழ்ச்சிகள் உருவாக்கலாம்.
- படத்திலுள்ள காட்சிகளின் அடிப்படையில் வினா உருவாக்கலாம்.
- கதை / கவிதை / படைக்கலாம்.



## கருத்துக் கூறுங்கள்

- பாடப்பகுதியிலுள்ள படங்களைக் குழந்தைகள் உற்றுநோக்கித் தங்களது சொந்தக் கருத்துகளைக் கூறட்டும். தொடர்ந்து குழந்தைகளை அவரவர் வசிக்கும் பகுதிகளின் அடிப்படையில் குழுவாக்குங்கள். ஒவ்வொரு குழுவினரையும் தங்கள் பகுதியிலுள்ள **ஆறு / குளம் / ஏரி** ஆகியவற்றின் தற்போதைய நிலைபற்றிக் கலந்துரையாடச் சொல்லலாம்.
- படங்களிலுள்ள காட்சிகளைத் தங்கள் பகுதியிலுள்ள **குளம் / ஆறு / ஏரி** ஆகியவற்றின் தற்போதைய நிலையுடன் ஒப்பீடு செய்யட்டும். பின்னர்க் குழுத் தலைவர் கருத்துகளைத் தொகுத்துக் கூறட்டும்.
- **குளம் / ஆறு / ஏரி** ஆகியவற்றின் தற்போதைய அவல நிலையைக் குழந்தைகளிடம் புரிந்து கொள்ளுமாறு செயல்பாட்டை வடிவமைக்க வேண்டும்.



## அறிவிப்புபலகை தயாரியுங்கள்

- முன்னர் நடந்த செயல்பாட்டின் தொடர்ச்சியாக இச்செயல்பாட்டை வடிவமைக்கலாம். **குளம் / ஆறு / ஏரி** ஆகியவற்றின் இன்றைய நிலைமைக்கான காரணங்களைக் குழுவில் கண்டுபிடிக்கலாம். அதன் அடிப்படையில் ஒவ்வொரு குழுவும் ஆற்றைப் பாதுகாக்கும் பொருட்டு அறிவிப்புப் பலகைள் தயாரிக்கட்டும். அறிவிப்புப் பலகை தயார் செய்யத் தேவையான பொருட்களைக் கொண்டு வர முன்னரே குழந்தைகளுக்குச் சொல்லி விடுங்கள்.

- அட்டைத்தாள்கள்
- வண்ணக் கலவைகள்
- வண்ணத் தாள்கள்
- கத்திரிக்கோல்

**அறிவிப்புப் பலகை :**

- குழுத் தந்திரங்களின் அடிப்படையில் குழந்தைகள் குழுவாதல்.
- அறிவிப்புப் பலகையின் தேவை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொதுக் கருத்தின் அடிப்படையில் முடிவு செய்தல்.
- அறிவிப்புப் பலகையின் சிறப்புகள், தன்மைகள் பற்றி அறிய ஆசிரியர் துணைபுரிதல்.
- குழுவில் அறிவிப்புப் பலகை தயாரித்தல்.
- வகுப்பில் வெளியிடுதல்.
- பிறகுழுவினர் மதிப்பீடு செய்தல்.
- அறிவிப்புப் பலகைகளின் மாதிரிகள் வெளியிடுதல்.
- குழந்தைகள் மேம்படுத்துதல் / படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளுதல்.
- குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

ஆற்று ஓரம் ஆக்கிரமிப்பு வேண்டாம்

ஆற்று நீரை அசுத்தம் செய்யாதீர்

ஆலைக் கழிவை ஆற்றில் கலக்காதீர்

ஆற்றங்கரையில் மரம் வளர்ப்போம்

ஆற்று மணலை அள்ளாதே

**தொடர் மதிப்பீடு**

**அறிவிப்புப் பலகை**

- கவனத்தை ஈர்க்கும் வண்ணம் இருத்தல்.
- கருத்துத் தெளிவுடன் இருத்தல்.
- சொல்லழகுடன் இருத்தல்.



## வாக்கியம் எழுதுங்கள்

தொடர்ந்து நதியைப் பற்றிக் குழந்தைகள் தங்களுக்குத் தெரிந்த வாக்கியங்களை எழுதட்டும்.

- நதியில் ஏராளமான மீன்கள் உள்ளன.
- நதி நீர் செடிகொடிகள் வளர உதவுகிறது.
- நதியில் நீந்திக் குளிக்கலாம்.
- நதியில் படகு ஓட்டலாம்.
- நதி ஓடிக் கடலில் கலக்கிறது.

**"படைப்புத் தொகுப்பில்"** சேர்த்துக் கொள்ளட்டும்.

# புல்லின் புலம்பல்

**வகுப்பறையில்**



இந்தப் பாடத்திற்குள் நுழையும் முன்பு குழந்தைகளிடம் இரண்டோ, மூன்றோ வினாக்களை எழுப்புங்கள். கருத்துகளை ஒவ்வொருவராகக் கூற வாய்ப்புக் கொடுங்கள்.

- **கதிரவன் உதிக்கவில்லை என்றால்**
- **காற்றே இல்லை என்றால்**
- **ஆறு / குளம் / ஏரி / கிணறு எல்லாம் வற்றினால்**
- **கடல் இல்லாமல் போனால்**
- **மழையே பொழியவில்லை என்றால்**




- இவ்வினாக்களை ஒவ்வொன்றாகக் கேட்டுக் கருத்துகள் கூறச் செய்து பாடப்பகுதியிலுள்ள **"புல்லின் புலம்பல்"** என்னும் கற்பனைக் கதையை வாசிக்கச் சொல்லலாம்.



## கண்டு பிடியுங்கள்

- புல் பேசியது என்ன? என்பதைக் குழந்தைகளே கூறுவார்கள் அல்லவா? காடுகள், அருவிகள், நதிகள், குளங்கள், ஏரிகள் என்ன ஆயின? பறவைகளும் விலங்குகளும் எங்கே போயிருக்கும்? அவற்றிற்கு என்ன நேர்ந்திருக்கும்? குழந்தைகள் கற்பனையாகக் கூறட்டும்.



## கருத்துகூறுங்கள்

- பாடபகுதியிலுள்ள (பக்கம் 14) படத்தைக் கவனித்துக் கதையுடன் ஒப்பிட்டுத் தங்களது கருத்துக்களைக் கூறட்டும்.
- உருவான கருத்துகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தி எழுதி வகுப்பில் தொங்கவிடுங்கள்.

- பட்டுப் போன மரம்.
- குழாயில் தண்ணீர் இல்லை.
- குரங்குக்குப் பழங்கள் கிடைக்கவில்லை.
- பறவைக்குக் கூடு கட்ட இடம் இல்லை.
- குழந்தைக்கு விளையாட நிழல் இல்லை.
- கிளைகள் எல்லாம் காய்ந்து போய் விட்டன.
- மரம் சோகமாக நிற்கிறது.

# நம் ஊரைப் போல வருமா?

## வகுப்பறையில்

- குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வரும் போதும், வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் போதும் ஏராளமான காட்சிகளைப் பார்த்திருப்பார் களல்லவா? அவர்கள் பார்த்த காட்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக எழுதச் சொல்லலாம்.

- சின்னச் சின்ன வீடுகள்
- சின்னச் சின்ன சாலைகள்
- சுற்றிலும் தேயிலைத் தோட்டங்கள்
- வழிந்தோடும் தண்ணீக் கால்வாய்கள்

- **“நம் ஊரைப் போல வருமா”** என்ற பாடப்பகுதியில் **“கிராமத்துக் காக்கா”** பார்த்த காட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வாசித்துப் பாருங்கள் என்று ஆசிரியர் கூறுதல்.



## கலந்துரையாடுங்கள்

- பாடப்பகுதியில் கிராமத்துக்காக்கா பார்த்த நகரக் காட்சிகளைக் குழுவாகக் கலந்துரையாடி எழுதச் சொல்லுங்கள்.
- எழுதியதை ஒவ்வொரு குழுத் தலைவரும் வகுப்பில் வெளியிடலாம். சிறந்த காட்சிகளை எழுதிய குழுவைப் பாராட்டலாம்.

- அடுத்தடுத்துச் செல்லும் வாகனங்கள்.
- அலைமோதும் மக்கள் கூட்டம்.
- அவசரமாகச் செல்லும் மனிதர்கள்.
- சுவர்களில் உட்கார்ந்திருக்கும் பறவைகள்.
- குவிந்து கிடக்கும் குப்பைகள்.

- குழந்தைகள் எழுதிய தொடர்களை மேலும் மேம்படுத்துங்கள். படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

## கையெழுத்துப் பத்திரிகை / சுவர்ப்பத்திரிகை

- ஒரு வகுப்பில் குழந்தைகள் எழுதியதும் வரைந்ததுமான படைப்புகள் நிரந்தரமாகப் பெருகிக் கொண்டிருக்கும்.
- இவற்றைப் பிறருக்குக் காட்டவும், தொடர் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கும் என்ன செய்யலாம்?
- குழந்தைகளின் கையெழுத்துப் பத்திரிகையும் சுவர்ப்பத்திரிகையும் இதற்கான ஓர் உபாயமாகும்.
- கையெழுத்துப் பத்திரிகை தயாரிக்கும் முன்னர் குழந்தைகளுடன் கலந்துரையாட வேண்டும்.
- **என்னென்ன வகை செய்திகளை உட்படுத்தலாம்?**

  - **படங்கள்**
  - **கவிதைகள், கதைகள்**
  - **பழமொழிகள்**
  - **விடுகதைகள்**
  - **குழந்தைகளின் படைப்புகள்**
  - **செய்திகள், துணுக்குகள்**

- கையெழுத்துப் பத்திரிகைக்கு / சுவர்ப்பத்திரிகைக்கு என்ன பெயர் வைக்கலாம்?
- தகவல்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தலாம்?
- காகிதம், வண்ணக்கலவைகள்... போன்ற என்னென்ன பொருட்கள் தேவைப்படும்?
- கலந்துரையாடி முடிவு செய்யுங்கள்.

**குறிப்பு** : ஒவ்வொரு அலகின் முடிவிலும் கிடைக்கும் படைப்புகளைப் பிற அலகுகளின் துணைக்கருவியாகப் பயன்படுத்துங்கள்.

# அலகு மதிப்பீடு

| மண்டலங்கள் | தரம் |
|---|---|
| படம் பார்த்துக் கருத்துக் கூறுதல் | |
| வர்ணனைத் தொடர் எழுதுதல் | |
| அறிவிப்புப் பலகை தயாரித்தல் | |
| ஒருமை பன்மை தொடர் எழுதுதல் | |

**கருத்துக் கூறுங்கள்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சித்தரிக்கும் படங்கள் / ஆற்று ஓரங்களை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் உள்ள படங்கள் வகுப்பில் தொங்கவிடுங்கள். குழந்தைகள் அவற்றை உற்றுநோக்கித் தமது சொந்தக் கருத்துகளைக் கூறட்டும்.

**வர்ணனைத்தொடர் எழுதுங்கள்**

குழந்தைகள் கண்டு இரசித்த காட்சிகளைப் பற்றி வர்ணனைத் தொடர்கள் எழுதுதல்.
(படங்கள் / இயற்கைக் காட்சிகள் / பூஞ்சோலைகள்)

**அறிவிப்புப் பலகை தயாரியுங்கள்**

உங்களது பாடசாலையைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக் கொள்வது எப்படி? பொருத்தமான அறிவிப்புப் பலகைகள் உருவாக்குங்கள். எந்தெந்த இடங்களில் அவற்றை நாட்டலாம்.

**பன்மைச் சொற்கள் எழுதுங்கள்**

- பழம் = ______________
- நாற்காலி = ______________
- காகம் = ______________
- பனை = ______________
- நிறம் = ______________
- பறவை = ______________
- மிருகம் = ______________
- குருவி = ______________